**<u>தமிழ்நாடு மாநில கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தல் ஆணையம்</u>**

அனுப்புநர்
திரு. ம.ரா. மோகன்., இ.ஆ.ப., (ஓய்வு),
தமிழ்நாடு மாநில கூட்டுறவுச் சங்கங்களின்
தேர்தல் ஆணையம்,
காமதேனு சிறப்பு அங்காடி, முதல் தளம்,
273, அண்ணாசாலை,
தேனாம்பேட்டை, சென்னை-600 018.

பெறுநர்
அனைத்து செயற்பதிவாளர்கள் /
மாநில தேர்தல் அலுவலர்கள்.

ந.க.101/2013/கூ.தே-5 நாள்: 19.09.2015

ஐயா / அம்மையீர்,

பாருள்: கூட்டுறவு தேர்தல் - கூட்டுறவு சங்கங்களின் நிர்வாகக்குழு உறுப்பினர்கள் தலைவர் மற்றும் துணைத் தலைவருக்கான தேர்தல் – தேர்தலுக்கான வாக்கு பெட்டிகள் கோருதல் – தொடர்பாக.

பார்வை: தமிழ்நாடு மாநில கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தல் ஆணையரின் கடிதம் இதே எண்ணிட்டது நாள் 05.02.2015.

*****

பார்வையில் காணும் கடிதத்திற்கு தங்களின் அன்பான கவனத்தை விழைகிறேன். போட்டியிருக்கும் சங்கங்களில் வாக்குப்பெட்டிகளுக்கான ஏற்பாடுகளை முன்கூட்டியே செய்திட வேண்டும் என்று தெரிவித்திருந்தும் தற்போது சில மாவட்ட தேர்தல் அலுவலர்கள் அதனை கைக்கொள்ளாது தேர்தல் நடைபெறும் நாளுக்கு ஓரிரண்டு நாட்களுக்கு முன்புதான் தமிழ்நாடு மாநில கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தல் ஆணையத்திடம் வாக்குப் பெட்டிகள் கோருவது கவலை தருவதாக உள்ளது. இதனால் கடைசி நேரத்தில் தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையத்திடமிருந்து வாக்குப் பெட்டிகளைப் பெற்று வழங்குவதில் நிர்வாக மற்றும் நடைமுறை சிக்கல்கள் உள்ளன. தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களின் இறுதி பட்டியல் தயார் செய்த நாளன்றே போட்டியிருப்பின் வாக்குப்பெட்டி வழங்கிட கோருமாறும், எந்தச் சூழ்நிலையிலும் அதிகாரப் பூர்வ வாக்குப்பெட்டிகள் இன்றி வாக்குப்பதிவு நடத்தக் கூடாது எனவும், வாக்குப்பெட்டிகள் இல்லை என்ற காரணம் காட்டி தேர்தலை நிறுத்துவது மற்றும் ஒத்திப்போடுவது ஏற்றுக்கொள்ள இயலாது என்றும், இவ்வாறு நிலை ஏற்படுமாயின் அதற்குக் காரணமானவர்கள் தகுந்த ஒழுங்கு நடவடிக்கைக்கு உட்பட நேரிடும் என்றும் அனைத்து மாவட்ட தேர்தல் அலுவலர்களுக்கும் தெரிவித்திடவும் இது தொடர்பாக தங்களால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையினை 30.09.2015க்குள் தெரிவித்திடவும் அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

**(ஒம்./–)**
**ஆணையர்.**